இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 21-03-2025

# நீதி நெஞ்சம் நிதி நிர்வாகம்

‘தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும் தொடர்ச்சியும்’ என்ற மாபெரும் ஆவணத்தை வெளியிட்டு இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். நிதிக் குவியலைக் கருவூலம் என்பார்கள். இந்த ஆவணம் என்பது, நிதி தொடர்பான கருத்துக் கருவூலமாக அமைந்திருக்கிறது. நூறாண்டு வரலாற்றைக் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தின் நிதி நிர்வாக நிழற்படம் இது.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த

வகுத்தலும் வல்லது அரசு - என்றார் வான்புகழ் வள்ளுவர்.

அத்தகைய வல்ல அரசுகளாக தமிழ்நாட்டு அரசுகள் அமைந்திருந்ததைச் சொல்லும் ஆவணம் இது.

**நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும், நிதித் துறைச் செயலாளர் உதயச்சந்திரன் அவர்களும் நிதித் துறைப் பொறுப்புடன் இணைந்து தொல்லியல் துறையையும் கவனிப்பவர்கள் என்பதால், நிதியிலும் தொல்லியல் ஆய்வைத் தொடர்ந்துள்ளார்கள் என்பதற்கான சாட்சியம் இது.**

வரவு – செலவு என்பது எண்களின் சேர்க்கையாக இருந்தால், ‘உனக்கு ஏன் நான் தரணும்?’ என்ற நிர்மலா சீதாராமன்கள் பாணியாகத் தான் இருக்கும். அது எண்ணங்களின் சேர்க்கையாக இருந்தால், ‘எப்படி பகுத்துண்ணலாம்’ என்பது தமிழர் நீதியாக அமையும். இத்தகைய தமிழர் நீதியை இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் உணர்த்துகிறது.

நீதிக்கட்சியில் தொடங்கியது சென்னை மாகாணத்தின் இரட்டையாட்சி என்பதால் நீதி நெஞ்சம் கொண்ட நிதி நிர்வாகமாக இது அமைந்திருப்பதை இதனுடைய பக்கங்களைத் திருப்பத் திருப்பத் தெரிந்து கொள்ளலாம். திகைக்கத் திகைக்க தித்திக்கும் செய்திகளாக இவை அமைந்துள்ளன. இந்தியாவில் எந்த மாநில அரசும் செம்மாந்த எண்ணத்துடன் இத்தகைய ஒரு தொகுப்பை இதுவரை வெளியிட்டிருக்காது என்று சொல்லத்தக்க வகையில் இது அமைந்துள்ளது.

சங்க காலம் முதல் சமூகநீதிக் காலம் வரையிலான தமிழர்களின் நிதி நிர்வாகச் சிறப்புகளின் வரலாற்றுப் பெருந்தொகுப்பாக இது அமைந்துள்ளது.

பண்டைய வணிகம், வரிவிதிப்பு முறைகள், காலனிய கால நிதிநிர்வாக நடைமுறைகள், தமிழ்நாட்டில் இதுவரை வெளியான நிதிநிலை அறிக்கைகள் கொண்ட ஆய்வுக் கட்டுரைகளின் மூலமாக பல்வேறு நூற்றாண்டுகளாகத் தமிழர் நிதி நிர்வாகம் உருவாகி வந்த வரலாற்றையும், தமிழ் நிலத்தின் பொருளாதார அடையாளம் வடிவமைக்கப்பட்ட விதத்தையும் குறித்த ஆழமான கண்ணோட்டம் இந்த நூலின் மூலமாகக் கிடைக்கிறது.

**‘காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே’ என்ற பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல் இதில் முதல் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. பிசிராந்தையார் சொல்லும் நீதி இலக்கணம் கொண்டதாக தமிழ்நாட்டின் நிதி நிர்வாகம் செயல்பட்டிருப்பதை மனக் கண் நம்முன்னே வந்து காட்டுகிறது. ஒரு மாவுக்குக் குறைந்த நிலமாக இருந்தாலும் அதில் விளைந்த நெல்லை கவளம் கவளமாக யானைக்கு ஊட்டினால் அது பல நாளுக்கு வரும், அப்படி இல்லாமல் நூறு வயல்களுக்குள் யானை தன் போக்கில் புகுந்தால் அழிவே அதிகமாக இருக்கும். அப்படி இல்லாமல் பிரித்து, பகுத்து, தேவைக்கு வழங்குபவனே அறிவுடை வேந்தன் என்கிறார் பிசிராந்தையார். அத்தகைய அறிவுடைத் திறமானது சங்க கால மன்னர் காலம் முதல் இன்று வரை நம் தமிழ்ச் சமூகத்தில் இருந்திருக்கிறது. ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்று இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லும் இலக்கணம், புறநானூற்றுப் பாடலின் தொடர்ச்சி தானே!**

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்

சேராது இயல்வது நாடு – என்றார் வள்ளுவர். வறுமை ஒழிக்கப்பட்டது தமிழ்நாட்டில். பட்டினிச் சாவு இல்லை. பணவீக்கம் இல்லை. நலிந்த பிரிவினர் பொருளாதாரத் தன்னிறைவை அடைந்து வருகிறார்கள். மத்திய தர வர்க்கத்தினர் மனநிறைவை அடைந்துள்ளார்கள். தொழில் துறையானது உயர்வை நோக்கியதாக அமைந்துள்ளது. தொழில் வளர்ச்சி என்பது தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியாக மட்டுமல்ல, அந்த வட்டாரத்தின் வளர்ச்சியாக, அந்த வட்டாரத்து மக்களின் வளர்ச்சியாக அமைந்துள்ளது. அனைத்துத் துறை வளர்ச்சி என்ற இலக்கணமானது மிகச் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை வளர்த்து வருகிறது.

**‘குறிக்கோளை அடைவதற்கான கருவிதான் நிதிநிலை அறிக்கை’** என்கிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள். குறிக்கோள் அடையப்பட்டுள்ளதா என்பதையும் அறியும் கருவியாகவும் நிதிநிலை அறிக்கைகள் அமைந்துள்ளன. யார் மீது எவ்வளவு வரிப் போட்டு நிதியைப் பெருக்கலாம் என்பதாக இல்லாமல், நிதி மூலமாக எத்தனை லட்சம் பேரை மேம்படுத்தலாம் என்பதாக தமிழ்நாட்டு நிதிநிலை அறிக்கைகள் இருந்துள்ளதை இந்த ஆவணத்தின் முலமாக அறியலாம்.

**இந்த அரிய ஆவணத்தை தமிழ் இணையக் கல்விக் கழகத்தினர் தொகுத்துள்ளனர். இந்நூலுக்காக சேகரிக்கப்பட்ட நூற்றாண்டு கால நிதிநிலை அறிக்கைகள், விரிவான திட்டமதிப்பீடுகள், ஒன்றிய - மாநிலத் திட்டக்குழுவின் ஆய்வறிக்கைகள், நிதி நிலை அறிக்கை தொடர்பான செய்திக் கட்டுரைகள், இதழ்கள், நூல்கள், ஒளிப்படங்கள் ஆகிய அனைத்தும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மின் நூலக சிறப்பு இணையப் பக்கத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.**

பொதுவாக நிதி என்பது சொல்ல எளிமையானதோ, படிக்க சுவையானதாகவோ அமைவது இல்லை. அத்தகைய நிதித்துறை பற்றியும் சுவையாய் - எளிமையாய் - புனைவின் நடையுடன் - சொல்ல முடியும் என்பதையும் காட்டி விட்டது இந்நூல். ‘நிதி நிலை அறிக்கைக்கு பட்ஜெட் என்பது பெயரில்லை. நிதிநிலை அறிக்கையைக் கொண்டு செல்லும் தோல் பெட்டிக்குத் தான் பட்ஜெட் என்று பெயர்’ என்பதைப் போன்ற ஏராளமான தகவல்கள் இதில் இருக்கிறது.

நிதிநிலை அறிக்கையை வறட்டுத் தனமாகப் பார்க்காமல் வாழ்வியலாகப் பார்க்கும் பார்வையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள ‘தொன்மையும் தொடர்ச்சியும்’ என்ற ஆவணம் உருவாக்குகிறது.

**பள்ளிக் குழந்தைகளின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்த அன்று, ‘நான் ஆட்சி அமைத்ததன் பலனை இன்று அடைந்துவிட்டேன்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ‘இந்த ஆட்சியின் இதயம் என்பது இதில் தான் இருக்கிறது’ என்று சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்கள்.**

**நிதியின் இதயம் நீதியாக இருக்கிறது. என்பதற்குச் சாட்சியாய் இருக்கிறது இந்த ஆவணம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வது தொடர்பாக தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரியின் அலுவலர்கள் குழுவைச் சேர்ந்த இந்திய விமானப்படை அலுவலர் ஏர் மார்ஷல் ஹர்தீப் பெயின்ஸ், ஏர் கமாண்ட் சேகர் யாதவ், ஏர் கமாண்ட் இம்ரான் ஹுசைன் சைடி, வருண் சர்மா, இந்திய ராணுவப்படை அலுவலர் பிரிகேடியர் ராஜேஷ் ராமன், பிரிகேடியர் சவுரப் பட்னாகர், பிரிகேடியர் ரஜ்னீஷ் சூயல், பிரிகேடியர் மனு ஜோஷி, பிரிகேடியர் ரோஹித் ஹரிமோகன், பிரிகேடியர் எல்.ஷ்யாம் குமார், இந்திய கடற்படை அலுவலர் சர்ஜ் கமாண்ட் விகாஸ் பாமிடிபட்டி, ஆர்.ஏ.எஸ். அலுவலர் அமித் வர்மா, ஐ.ஆர்.பி.எஸ். அலுவலர் செல்வி ரேகா யாதவ், பங்களாதேஷ், பூடான், மால்வி, ஆஸ்திரேலியா, நைஜீரியா ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் பயிற்சி பெற வருகை தந்துள்ள ராணுவ வீரர்கள் பிரிகேடியர் ஜென்ரல் கோலம் கிப்ரியா ஜமாம், கர்னல் தின்லி டோர்ஜி, கர்னல் ஜேம்ஸ் மாத்யூ அதினி, கர்னல் அப்துல்லா கோலோ அலி, குரூப் கேப்டன் ஆன்ட்ரூ ரால்ப் ப்ரான்தம் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.3.2025) சட்டமன்றப் பேரவையில், திருநெல்வேலியில் ஓய்வு பெற்ற காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் கொலை சம்பவம் தொடர்பாக கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புக்கு பதிலளித்து உரையாற்றினார்.

### நெல்லை ஜாகீர் உசேன் கொலை வழக்கில்

# குற்றவாளிகள் பாரபட்சமின்றி நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மார்ச் 21 -**

**ஓய்வு பெற்ற காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் ஜாகீர் உசேன் அவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புக்கு பதிலளித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே, விதி 55ன்கீழ், திருநெல்வேலியில் ஓய்வு பெற்ற காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் மீது நடைபெற்ற தாக்குதல் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலர் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். இதிலே பல்வேறு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் தங்களது பெயர்களைக் கொடுத்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களை மட்டும் இங்கே பேச அனுமதிக்காமல், இதிலே கவன ஈர்ப்பு கொடுக்காதவர்களும் பேசியிருக்கிறார்கள் என்றால், இதில் இந்த அரசு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். நீங்கள் எப்படி இந்தக் கவன ஈர்ப்பு தீர்மானத்தில் தங்களுடைய பெயர்கள் இடம் பெறவேண்டுமென்று கருதி, பேசி இடம் பெற்றிருக்கிறீர்களோ, அதைப்போல், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், அதே அக்கறையோடு நிச்சயமாக சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் கடுமையாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெல்லை மாநகர**
**காவல்துறை விசாரணை!**

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், மூர்த்தி ஜஹான் தைக்கா தெரு பகுதியில் வசித்து வந்த ஓய்வு பெற்ற காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் ஜாகீர் உசேன் என்பவர் நேற்று அதிகாலை திருநெல்வேலி மாநகர தெற்கு மவுண்ட் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத சில நபர்கள் வழி மறித்து தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். ஜாகீர் உசேன் அவர்களின் மனைவி அளித்த புகாரின் அடிப்படையில் திருநெல்வேலி மாநகர காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, இவ்வழக்கு தொடர்பாக திருநெல்வேலி தொட்டி பாலத் தெருவைச் சேர்ந்த இருவர் திருநெல்வேலி குற்றவியல் நடுவர் 4 நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில் மற்ற எதிரிகளை காவல்துறையினர் தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

**ஜாகீர் உசேனின்**
**காணொலி குறித்து விசாரணை!**

கொலையுண்ட ஜாகீர் உசேன் கடந்த 08.01.2025 அன்று அவரது முகநூல் பக்கத்தில் ஒரு காணொலி வெளியிட்டுள்ளது பற்றியும், அதில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

காவல் துறையின் முதற்கட்ட விசாரணையின்படி, மறைந்த ஜாகீர் உசேனுக்கும், அதே பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்கிற முகமது தௌபிக் என்பவருக்கும் நிலம் தொடர்பாக ஒரு பிரச்சினை இருந்து வந்துள்ளது.

இடப்பிரச்சினை தொடர்பாக கிருஷ்ணமூர்த்தி என்கிற முகமது தௌபிக் மற்றும் அவரது மைத்துனர் அக்பர்ஷா ஆகியோர், ஜாகீர் உசேன் மீதும், ஜாகீர் உசேன் அவர்கள் எதிர்த்தரப்பினர் மீதும் மாறி, மாறி புகார் மனுக்களை அளித்துள்ளனர். இவற்றின்மீது காவல் துறையினரால் சமுதாயப் பதிவேடு எண்கள், அதாவது, CSR எண்களும் வழங்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நடந்த சம்பவம்**
**கண்டிக்கத்தக்கது!**

ஜாகீர் உசேன் அவர்கள் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக சமூக வலைதளங்களில் வீடியோ வெளியிட்டதைத் தொடர்ந்து, ஏற்கெனவே பதியப்பட்ட CSRன் அடிப்படையில் அவரை அச்சுறுத்துவதாகக் குறிப்பிட்ட எதிர்த்தரப்பினரை திருநெல்வேலி மாநகர காவல் நிலையத்திற்கு அழைத்து காவல் துறையினர் விசாரித்துள்ளனர். மேற்படி விசாரணை நடைபெற்றுவரும் சூழ்நிலையிலேயே, நேற்றைய தினம் இந்தக் கண்டிக்கத்தக்க சம்பவம் நடைபெற்றுள்ளது.

இக்கொலை வழக்கில் தீவிர விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள், அவர்களுக்கு பின்னணியில் இருந்தவர்கள் அனைவர் மீதும் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பாரபட்சமின்றி நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டத்தின் பிடியிலிருந்து**
**யாரும் தப்ப முடியாது!**

சட்டத்தை யாரும் தங்கள் கையில் எடுத்துக்கொள்ள இந்த அரசு அனுமதிக்காது. இந்தக் கொலை வழக்கு மட்டுமல்ல, எந்தக் குற்றத்தில் ஈடுபடுபவராக இருந்தாலும், சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

### சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பை ஏற்று

# பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக் கம்பங்களை அகற்றிடுக!

## கழகத்தினருக்கு பொதுச் செயலாளர் துரைமுருகன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 21-

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பினை ஏற்று பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழகக் கொடிக்கம்பங்களை அகற்றிட வேண்டும் என கழக நிர்வாகிகளுக்கு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-



“தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்குச் சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்கள், சாதி மத ரீதியிலான அனைத்து கொடிக் கம்பங்களையும் 12 வாரங்களுக்குள் அகற்ற வேண்டும்.” என சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை 27.1.2025 அன்று உத்தர விட்டது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டு, இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்விலும் அந்தத் தீர்ப்பு கடந்த 06.03.2025 அன்று உறுதி செய்யப்பட்டது.

எனவே, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், தத்தமது பகுதிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்குச் சொந்தமான இடங்களிலும் பொது இடங்களிலும் வைத்துள்ள கழகக் கொடிக் கம்பங்களை மதுரை உயர்நீதிமன்ற கிளை அளித்த தீர்ப்பினை ஏற்று, தாங்களே முன்வந்து 15 நாட்களுக்குள் அகற்றிட வேண்டுமெனவும் அவ்வாறு அகற்றப்பட்ட கழகக் கொடிக் கம்பங்களின் விவரங்களை தலைமைக் கழகத்திற்கு தெரியபடுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.